# இலங்கையில் முஸ்லிம்களின் நடத்தைகள் மீதான பௌத்தர்களின் புரிதல்கள்: கனேவல்பொள பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

# Buddhist Understandings on Muslim Behaviours in Sri Lanka: Study Based on Ganewalpola Area

Rushana Ameer[1] & Farhana Zeenath[2]

[1&2] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
a.rushana94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கனேவல்பொள பிரதேசத்தில் முஸ்லிம்களின் நடத்தைகள் தொடர்பான பௌத்த மக்களின் புரிதல்களின் தன்மையில் கடந்த சில வருடங்களாக மாற்றங்கள் ஏற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. இதன் விளைவுகளில் ஒன்றாக பௌத்த முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதுடன் முரண்பாடுகளுக்கும் வித்திட்டுள்ளது. எனவே இவ்வாறான பௌத்த மக்களின் புரிதலின் தன்மையினை தெளிவுபடுத்தும் முகமாக முஸ்லிம்களின் அன்றாட செயற்பாடுகளை அரசியல், பொருளாதாரம், கலாசார, திருமண செயற்பாடுகள் தொடர்பாக முஸ்லிம்களின் நடத்தைகள் பௌத்த மக்களின் புரிதலில் எவ்வாறான தாக்கத்தினை செலுத்துகின்றன என்பதை கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இது ஒரு பண்புசார் ஆய்வு என்பதனால், முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் அனுராதபுர மாவட்டத்தில் காணப்படும் 114 கிராமங்களில் கனேவல்பொள கிராமத்தினை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் நடத்தை குறித்த பௌத்த மக்களின் கருத்துகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள 30 பௌத்த மக்களை மாதிரியாகக் கொண்டு நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் முஸ்லிம்களின் நடத்தைகள் தொடர்பான பௌத்த மக்களின் புரிதல்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. பௌத்த முஸ்லிம் உறவில் முரண்பாடுகள் தோன்றுவதற்கான முஸ்லிம்களின் செயற்பாடுகளாக அரசியல், பொருளாதார மோசடி, சுகாதாரம் பேணாமை, பர்தா அணிதல், தாடி வைத்தல் போன்ற பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அவற்றுல் கலாசார ரீதியான முஸ்லிம்களின் நடத்தைகளே பௌத்தர்களின் புரிதல்களின் தன்மையில் அதிக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான பௌத்த மக்களின் புரிதல்களில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின் இரு மதங்களுக்குமிடையில் சமய சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பதுடன் முஸ்லிம்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் இஸ்லாமிய போதனைகளை பின்பற்ற முன்வரும் போது பௌத்த முஸ்லிம் உறவில் நல்லிணக்கத்திற்கும் இரு சமயங்களுக்குமிடையிலான புரிதலினை சிறப்பாக அமைத்துக் கொள்ளவும் முடியுமாக இருக்கும். இது எதிர்காலத்தில் பௌத்த முஸ்லிம் உறவினை கட்டியெழுப்பவும் முரண்பாடுகளை தடுக்கவும் அதே போல சமூக நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கும் இவ்வாய்வு பயனுடையதாக அமையும்.

**திறவுச் சொற்கள் :** பௌத்தர்கள், இஸ்லாம், முஸ்லிம்கள், புரிந்துணர்வு, நடத்தைகள்.

## 1. அறிமுகம்

இன்று உலக நாடுகள் அனைத்தும் பன்மைத்துவ சமூகங்களை உள்ளடக்கி இருப்பதனை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் சமூகங்களுக்கிடையில் சமாதானம், சகவாழ்வு என்பன மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். பன்மைத்துவ சமூக அமைப்பு இலங்கையின் சிறப்புக்களுள் ஒன்றாகும். இங்கு பெரும்பான்மையினரான பௌத்தர்களுக்கு மத்தியில் சிறுபான்மையினர்களாக முஸ்லிம்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் ஏனையோர் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான காலத்தில் இருந்து பௌத்த முஸ்லிம் உறவுகள் சிறப்பான முறையில் பேணப்பட்டு வந்துள்ளதை காணமுடிகிறது. அந்த வகையில் நீண்ட கால வரலாறுகளை பௌத்த முஸ்லிம் உறவு கொண்டுள்ளது. கி.பி 2ம் நூற்றாண்டில் அரேபிய இலங்கை தொடர்பு காணப்பட்ட போதிலும் கி.பி 6ம் 7ம் நூற்றாண்டின் பின்னரே இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாகி முஸ்லிம்கள் குடியேற்றங்களை அமைத்தனர் என வரலாறுகள் உறுதிப்படுத்துகின்றன.

இங்கு முஸ்லிம்களின் சனத்தொகை 9.7 சதவீதமாகும். சனத்தொகையில் இரண்டாம் இடத்தை கொண்ட முஸ்லிம்கள் பெரும்பான்மையினரான சிங்களவர்களோடும் இன்னொரு சிறுபான்மையினரான தமிழர்களோடும் சுமூகமான உறவை பேணி வருகின்றனர். பௌத்தர்களும் முஸ்லிம்களும் வரலாறு நெடுகிலும் சமய நடைமுறைகளை பேணி ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர். வியாபாரிகளாக வந்த முஸ்லிம்களுடன் அவர்களின் நம்பிக்கை, திறமை காரணமாக பௌத்தர்கள் நெருக்கமான உறவை கொண்டிருந்தனர். இதனால் திருமண உறவுகள் உட்பட பல்துறை சார் உறவுகளையும் பௌத்தர்களும் முஸ்லிம்களும் பேணி வந்தனர். ''தவளம்'' எனும் மாடுகளைக் கொண்டு பிணைக்கப்பட்ட வண்டிகள் மூலம் பொருட்களை ஏற்றி வணிகம் செய்யும் முறையை முஸ்லிம்களே அறிமுகம் செய்தனர். நாட்டிற்குக்கு விசுவாசமான நற்பிரஜைகளாகவும் முஸ்லிம்களே காணப்பட்டனர். இலங்கையை ஆக்கிரமித்த போர்துக்கேயரை முஸ்லிம்களே முதலில் எதிர்தனர். வைத்திய துறைபோலவே சமையல் துறையிலும் முஸ்லிம்கள் சிறந்து விளங்கினர். அரண்மனையில் ''முல்தங்கே'' எனும் அரச சமையலறை வேலைகளை கவனிக்கும் திணைக்களத்தில் பணிபுரிந்தனர். இதில் பணி புரிபவர்கள் நம்பகமானவர்களே மேலும் ''உலபங்கே'' எனும் நீராட்டல் பணிக்கும் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் விகாரை பணிகளிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர். தளதா மாளிகைக்கு சொந்தமான நிலம் முஸ்லிம்கள் பெற்றிருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. சிங்கள மன்னர்கள் முஸ்லிம்களையே தூதுவர்களாக தெரிவு செய்தனர். இவ்வாறு பௌத்தர்களுடன் முஸ்லிம்கள் மிக நெருக்கமான உறவை கொண்டிருந்ததுடன் முஸ்லிம்களின் வீடுகளில் உணவருந்தும் அளவுக்கு அவர்களின் உறவுகள் காணப்பட்டன. இச்சினேகபூர்வமான காலத்திலே இலங்கை காலணித்துவ வாதிகளின் கைகளில் சிக்குண்டது.

காலத்திற்கு காலம் ஏன் இவ்வாறான அழுத்தங்கள் முஸ்லிம்கள் மீது தோற்றுவிக்கப்படுகின்றது என்ற கேள்வி எழுப்படும் போது பல்வேறு தரப்பில் இருந்தும்

கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. அந்த வகையில் இவ் ஆய்வானது முஸ்லிம்களின் நடத்தைகள் தொடர்பாக பௌத்த மக்களின் புரிதலின் தன்மை தொடர்பாக ஆராயப்படுவதுடன் முஸ்லிம்கள் சிங்கள பௌத்தர்களுடன் நல்லுறவை பேணுவது பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு பற்றியும் ஆராயப்படவுள்ளன. இவ் ஆய்வானது எதிர்கால பௌத்த முஸ்லிம் உறவை கட்டியெழுப்பவும் சமூக முரண்பாடுகளை நீக்கவும் துணைசெய்யும்.

## 2. ஆய்வுப் பிரச்சினை

அனைத்து சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நல்லெண்ணம் கொண்ட சகல மக்களும் சகவாழ்வுடன் நிம்மதியாக வாழவேண்டுமென்றே விரும்புகின்றனர். ஆனால் இனவாதம் இம் மக்களின் சமதான சகவாழ்வுக்குத் தொடர்ச்சியாக சவால் விடுத்துக்கொண்டிருக்கின்றது.

சிறுபான்மையினரான முஸ்லிம்களை நெருக்கடிக்குள் தள்ளுவதை இலக்காகக் கொண்டு செயற்படும் சில குறிப்பிட்ட கடும்போக்கு இனவாதிகளும் சிறுபான்மையினரின் கலை கலாசார பண்பாட்டு நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்களில் பௌத்த முஸ்லிம்களின் நல்லுறவில் பாதிப்பினை ஏற்படுத்த முனைகின்றனர். இந்நாடு சுதந்திரமடைவதற்கு முன்னரும் பின்னருமான காலங்களில் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்கள் மத்தியிலுள்ள கடும்போக்காளர்கள் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொண்ட இனவாத செயற்பாடுகள் தீராத இனப்பிரச்சினையையும் முப்பது வருடகால கொடூர யுத்தத்தையும் பேரழிவுகளையும் விளைவுகளாக கொடுத்தது மாத்திரமன்றி சமூகங்களுக்கிடையில் சண்டை சச்சரவுகளையும் சந்தேகப்பார்வையையும் உருவாக்கியது.

இந் நிலையில் சுதந்திர தேசத்தில் வாழும் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழ முடியும் என்றும் உரிமை சாசனங்களும் நிபந்தனைகளும் நியதிகளும் சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் வகுக்கப்பட்டிருந்தும் இந் நாட்டின் பெரும்பான்மை சமூகமான பௌத்த சிங்களவர் மத்தியிலுள்ள கடும்போக்கு இன வாதிகள் இன வாதத்திற்கு முன்னுரிமை வழங்கி சர்வதேச யாப்புகளையும் தேசிய அரசியல் சாசனங்களையும் சட்டங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு அவற்றை ஒரு பொருட்டாக கருதாது செயற்படுவது சமூகங்களின் சகவாழ்வுக்கு சவாலாக அமைகின்றது.

அந்த வகையில் ஆரம்ப காலத்தில் பௌத்த முஸ்லிம் உறவு சுமூகமாக காணப்பட்ட போதிலும் இன்று இரு சமூகங்களுக்குமிடையில் ஒரு முரண்பட்ட நிலமை தோன்றுவதற்கு காரணம் என்ன? முஸ்லிம்களின் நடத்தைகளை பௌத்த மக்கள் எவ்வாறான கண்ணோக்கில் நோக்குகின்றனர் என்பதனை கண்டறிவதே ஆய்வுப் பிரச்சினையாக முன்வைக்கப்பட்டு நேர்காணல் மூலம் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்படவுள்ளன.

## 3. ஆய்வின் நோக்கம்

அனுராதபுர மாவட்ட கனேவல்பொள பிரதேச முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார, சமய சமூக மற்றும் திருமண ரீதியான நடத்தைகள் மீதான பௌத்த மக்களின் புரிந்துணர்வு பற்றி அறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

## 4. ஆய்வு முறையியல்

கனேவல்பொள கிராமத்தில் 400 பௌத்த மக்கள் வாழ்கின்றனர். (கனேவல்பொள கிராம சேவகர் பிரிவு 2019). அனுராதபுர மாவட்டத்தில் காணப்படும் 114 கிராமங்களில் கனேவல்பொள கிராமத்தினை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் நடத்தை குறித்த பௌத்த மக்களின் கருத்துகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள 30 பௌத்த மக்களை மாதிரியாகக் கொண்டு ஆய்விற்கு தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ் ஆய்வுக்குரிய தரவுகள் முதல் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் சேகரிக்கப்பட்டு தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கான தரவுகள் பண்பு ரீதியானதாகும். தரவு சேகரிப்பு மூலத்தில் ஒன்றாக நேர்காணல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்காணல் முறைகளில் ஒன்றான அரைக்கட்டமைக்கப்பட்ட நேர்காணல் முறை (Semistructured Interview) மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்கு வேண்டிய தகவல்களைப் பெறும் நோக்கத்தில் முன்கூட்டியே ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வினாப்பட்டியலுடன் நேர்காண்பவரை நேரடியாக சந்தித்து வினா விடை முறையில் தகவல்களைப் பெற்று வரிசைப்படி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. நேர்காண்பவரின் பெயர், ஊர், வயது, தொழில் என்பனவும் அனைவரிடமும் கேட்கப்பட்டன. அநேகமான சந்தர்பங்களில் நேர்காண்பவர் வழங்கும் தகவல்களுக்கேட்ப வினாக்கள் மாற்றப்பட்டன. இதன் மூலம் இவ்வாய்வின் நோக்கம் அடையப்பெற்றுள்ளன.

## 5. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

இவ்வத்தியாயமானது அனுராதபுர மாவட்டத்தில் கனேவல்பொள கிராமத்தில் முஸ்லிம்களின் நடத்தைகள் எவ்வாறானது அதனை பௌத்த மக்கள் எவ்வகையில் புரிந்து கொள்கின்றனர். என்ற தகவல்களை திரட்டி அவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் நோக்கில் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

### 5.1. முஸ்லிம்களின் அரசியல் ரீதியான நடத்தைகளும் பௌத்தர்களின் புரிதல்களும்

ஆரம்ப காலத்தினை போன்று பௌதர்களும் முஸ்லிம்களும் அரசியல் ரீதியாக இணைந்தே செயற்படுகின்றனவா என்பது கேள்விக்குறிய விடயமாக சமகாலத்தில் நோக்கப்படுகின்றது. ஏனெனில், பௌத்த முஸ்லிம்களிடையேயான அரசியல் ரீதியான உறவுகளில் சில மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வேறுபாடுகள் இடம்பெறுவதற்கான அடித்தளம் 1956 அல்லது 1958 களின் பின்னரே இடம்பெற்றிருக்கின்றது. இன்று அரசியல் அபிலாஷைகளைப் பெறுவதிலும் உரிமைகள் மற்றும் கோரிக்கைகளை முன்வைப்பதிலும் மாற்றங்கள் இடம்பெறுகின்றமை, இன ரீதியான கட்சிகள் தோற்றம் பெற்றமை, இன்றைய அரசியல் முறைமை எனும் வகையில் மக்கள் அழுத்தங்களுக்கு உற்படுகின்றமை போன்றவற்றின் மூலம் உறவுகள் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். அதே போன்று அரசியல் அபிலாசைகளை பெற்றுக் கொள்ள இனக் குழுக்களிடையே முரண்பாடுகள் ஏற்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

ஏனெனில் பௌத்த மக்கள் சார்பாக பௌத்த ரீதியான இனக் குழுக்களின் தோற்றமும் முஸ்லிம் சார்பாக முஸ்லிம்களை தலைமையாகக் கொண்ட இனக்குழுவும் தோன்ற ஆரம்பித்தன. இதனால் தங்கள் இன நலனுக்காகவும் தன் இன அபிலாஷைகளை நிறைவேற்றவுமே மக்கள் முனைந்து செயற்பட்டதுடன் ஏனைய இனங்களை பின்தள்ளவே முயற்சிக்கின்றனர்.

இனத்துவக் கட்சிகள் தோற்றம் பெற்று இரு சாராரையும் தப்பபிப்ராயத்திற்கு இட்டுச் சென்றுள்ளமையும் உரிமைகள் பாதிக்கப்பட்டு பிரதிநிதித்துவங்கள் குறைவாகவே கிடைக்கப்பெறுகின்றமையும் முஸ்லிம்களின் வாக்குகள் பௌத்தர்களுக்கு கிடைப்பதில்லை என பெரும்பான்மையினர் குறிப்பிடுகின்றனர். பிற்பட்ட காலங்களில் இனத்துவ கட்சிகள் தோற்றம் பெற்றமை இருசாராரிடமும் பிளவினை ஏற்படுத்தியது என பௌத்தர்கள் குறிப்பிடுகின்றனர். இரு இனங்களையும் நோக்கும் போது 70 சதவீதமானோர் இனத்துவக் கட்சிகளின் தோற்றம் அரசியல் ரீதியான தப்பபிப்ராயத்திற்கு வழிவகுப்பதாக கூறுகின்றனர். இரு சமய உறவிலும் விரிசலை ஏற்படுத்தியதாக 50.5 வீதமானோர் குறிப்பிடுகின்றனர். அரசியலில் இன ரீதியான செல்வாக்கு மேலிடும் போது இரு சாராரிடையும் பிளவினை ஏற்படுத்தியுள்ளது.

அட்டவணை 1 அரசியல் ரீதியான பிரதிநிதித்துவம்

| **அரசியல் ரீதியான பௌத்த மக்களின் புரிந்துணர்வு** | **ஏற்றுக்கொண்டோர் வீதம்** |
|---|---|
| அரசியல் கோரிக்கைகள் உரிமைகளை முன்வைத்தல் | 42.3 % |
| அரசியல் ரீதியான நலன்கள் | 52 |
| அரசியல் வேட்பாளர்களின் அதிகரிப்பு | 40 |
| அரசியல் உதவிகள் கிடைக்கப்பெறல் | 34.62 |
| அரசியல் அபிலாசைகள் | 54 |
| இனரீதியான விழிப்புணர்வு | 65.38 |

(மூலம்: நேர்காணல் பகுப்பாய்வு 2018)

அதே போன்று முஸ்லிம்களின் அரசியல் ரீதியான செயற்பாடுகள் பௌதர்களுக்கு முஸ்லிம்கள் மீதான தப்பபிப்ராயத்தை ஏற்படுத்தியது. பொதுவாக இரு சமயங்களையும் பார்க்கும் போது இலங்கையில் அரசியல் முறைமையானது முஸ்லிம்களின் அரசியல் ரீதியான விழிப்புணர்வு செயற்பாட்டினால் 55.5 வீதத்திற்கும் அதிமான எதிர்மறையான புரிதல்களை பௌத்த மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது. மேலும் அரசியல் ரீதியான இலாபங்கள், இனரீதியான விழிப்புணர்வு, அரசியல் வேட்பாளர்களின் அதிகரிப்பு போன்ற செயற்பாடு அனைத்திலும் முஸ்லிம்கள் முன்னரை விட சிறப்பாக செயற்படுவதனால் பௌத்தர்கள் ஆரம்ப காலங்களை போன்று அரசியலில் இணைந்து செயற்பட பின்வாங்குகின்றனர். பௌத்த மக்களின் பொதுவான கருத்தினை நோக்கும் போது முஸ்லிம்கள் அரசியல் நலன்களையும் அரசியல் அதிகாரத்தினையும் பெற முயற்சிக்கின்றனர் என்றும் அரசியல் தொடர்பான முஸ்லிம்களின் செயற்பாடு தொடர்பான பௌத்த மக்களின் புரிதலின் மையக்கருத்து என்னவெனில்

முஸ்லிம்கள் அரசியல் அதிகாரத்தில் தாமே முன்னிலை வகிக்க வேண்டும் என எண்ணுகின்றனர் என பௌத்த மக்கள் குறிப்பிடுகின்றனர்.

### 5.2 முஸ்லிம்களின் பொருளாதார ரீதியான நடத்தைகளும் பௌத்த மக்களின் புரிதலும்

இப் பிரதேசங்களில் பௌத்தர்களும் முஸ்லிம்களும் பொருளாதார நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். பொருளாதாரத்தில் முக்கியமான துறையாக விவசாயம் காணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் இருந்தே பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்குமான உறவு மிகவும் பலமானதாகவே காணப்பட்டன.

ஆரம்ப காலங்களில் சேனைப் பயிர்ச் செய்கையே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இன வேறுபாடுகளின்றி அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டனர். பயிர்செய்கை நிலங்களை கூட இரு இனங்களுக்குள் மாற்றிக் கொண்டு செயற்பட்டனர். தமது பயிர்ச்செய்கை நிலங்களைக் கூட குத்தகையாக விளையும் தானியங்களைப் பறிமாறிக் கொண்டமையும் இப் பிரதேசத்தில் பௌத்த முஸ்லிம் புரிந்துணர்வை தெளிவுபடுத்துகின்றது.

தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேவைப்படும் இயந்திரங்களை தங்களுக்குள் பரிமாறிக் கொண்டனர். முஸ்லிம்களுக்கு பௌத்தர்களின் கிராமங்களில் விவசாய நிலம் காணப்படுவதை போல பௌத்தர்களுக்கும் முஸ்லிம் கிராமங்களில் வயல் நிலங்கள் காணப்பட்டன. ஆனால் இரு சாராரும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பௌத்த கிராமங்களில் விவசாய நிலங்களை கொண்ட முஸ்லிம்கள் தமது விவசாய தேவைகளுக்காக பௌத்தர்களையே நாடினர். உதாரணமாக உழவு இயந்திரங்களைப் பெற்றுக் கொண்டனர். வயல் விதைத்தல், நீர் திருப்புதல், யானைகளிடம் இருந்து நிலங்களை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அருவடைக்கான கலம் அமைத்தல், உணவு பரிமாறல் போன்ற அனைத்து செயற்பாடுகளிலும் இரு சாராரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையுடனும் முரண்பாடுகளற்ற புரிந்துணர்வுடனும் செயற்பட்டு வந்தனர்.

ஆண்களை போலவே பெண்களும் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவி ஒத்தாசைகளை வழங்கினர். இவர்கள் தயிர், பால், கிழங்கு போன்றனவற்றை பரிமாரிக் கொண்டனர் விவசாய செயற்பாடுகளில் இருசாராரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டனர். இப் பிரதேசத்தின் பொருளாதார மூலமாக காணப்படுவது விவசாயமும் வியாபாரமுமாகும். இவ்விரு சாராரிடமும் பொருளாதார ரீதியான புரிதல்கள் தெளிவாக காணப்பட்டன.

ஆனால் அதனை தொடர்ந்து வந்த காலங்களில் பௌத்த முஸ்லிம் உறவானது ஒரு சுமூகமான உறவாக காணப்படவில்லை. நம்பிக்கை துரோகங்களும் காணிகளை அபகரிக்கும் நிலையும் பொருளாதார ரீதியான போட்டியும், பொருளாதார அபிலாஷையும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் முஸ்லிம்கள் மீதான நம்பிக்கையும் பௌதர்களிடம் குறைவடைந்து செல்வது குறிப்பிடத்தக்கது.

**அட்டவனை 2 வியாபார ரீதியான பிரதிநிதித்துவம்**

| **வியாபார ரீதியான பௌத்த மக்களின் புரிதல்** | **ஏற்றுக்கொண்டோர் சதவீதம்** |
|---|---|
| முஸ்லிம்களின் நம்பிக்கை துரோகமும் பொருள் விற்பனையில் மோசடி | 50 |
| காணிகளை குத்தகைக்கு வழங்காமை | 7.69 |
| முஸ்லிம்கள் மீதான நம்பிக்கை குறைவடைந்தமை | 34.61 |
| பொருளாதார ரீதியான போட்டி | 38.46 |

(மூலம் : நேர்காணல் பகுப்பாய்வு 2018)

பௌத்தர்கள் முஸ்லிம்களின் கடைகளில் பொருட்களை வாங்க விரும்பாமை. அதற்கு காரணம் முஸ்லிம்களின் கடைகளில் சுகாதாரம் பேணப்படுவதில்லை. வியாபார பொருட்களின் மீதான அதிக விலை, முஸ்லிம் எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலும் முஸ்லிம்கள் பௌத்தர்களின் கடைகளுக்கு செல்ல விரும்பாமை, இவ்வாரண முஸ்லிம்களின் செயற்பாட்டினால் பௌத்த மக்களின் புரிதல் நேர்மறையானதாகவே காணப்படுகிறது. முஸ்லிம்களின் கடைகள் பௌத்தர்களுக்கு விற்கப்படாமை, பௌத்தர்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட கடைகளை முஸ்லிம்கள் மீளப்பெற்றமை, முஸ்லிம்களுக்குள் மாத்திரமே கடை விற்பனை வாடகை என்பன இடம்பெற வேண்டும், அதே போல பௌத்தர்களின் உணவகங்களில் முஸ்லிம்கள் போவதில்லை என்பதற்கு பன்றி இறைச்சி விற்பனை ஒரு காரணியாக காணப்படினும் அதை பௌத்தர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அந்நெருக்கடியான சூழலில் கூட ஏன் முஸ்லிம்கள் வர தயங்குகின்றனர் என கேட்பதுடன் கடைக்கு வந்து பௌத்தர்களின் கடை என தெரிந்தால் எதனையும் கொள்வனவு செய்யாது பின்வாங்குகின்றனர்.

இவ்வாறான பொருளாதார விடயங்களிலும் பௌத்தர்கள் மீது முஸ்லிம்கள் பாரபட்சம் காட்டுவதனை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என பௌத்த சகோதரர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான செயற்பாட்டினால் பௌத்தர்கள் பௌத்த கடைகளுக்கும் முஸ்லிம்கள் முஸ்லிம் கடைகளுக்கு மாத்திரமே செல்லும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறான நிலை ஏற்படக் காரணம் போட்டி மனப்பான்மையும் இன ரீதியான செயற்பாடுகளுமே காரணம் என குறிப்பிடுகின்றனர். நாம் முஸ்லிம்களை விட்டு தூரம் செல்ல காரணம் அவர்களின் நடத்தையே என பௌத்த சகோதரர்களில் 50 வீதமானோர் குறிப்பிடுகின்றனர்.

இன்று பொருளாதார துறையில் முஸ்லிம்களிடமே பெரிய நிறுவனங்கள் காணப்படுகின்றன. இதனால் பௌத்தர்கள் முஸ்லிம்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. அத்தோடு பொருளாதார நெருக்கடி இரு சமய உறவிலும் தாக்கம் செலுத்தி இருப்பதை துள்ளியமாக எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இதனால் பௌத்தர்கள் முஸ்லிம்களிடம் இருந்து தூரமாகி செல்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அண்மைக்கால முஸ்லிம்களின் செயற்பாட்டினால் பௌத்த மக்களின் புரிதலிலும் தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகிறது. இதனால் ஆரம்ப காலங்களை போன்று பௌத்த மக்களின் முஸ்லிம்கள் மீதான செயற்பாட்டில் காணப்பட்ட புரிந்துணர்வு இன்றைய சூழலில் குறைவடைந்து செல்கின்றமையினை ஆய்வின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன.

**5.3 சமய, கலாச்சார ரீதியான பௌத்த மக்களின் புரிதல்**

பல சமயங்களை உள்ளடக்கிய ஒரு நாடாக இலங்கை காணப்படுவதை போல அனுராதபுர மாவட்டத்தில் கனேவல்பொள கிராமமும் பௌத்த மக்களையும் முஸ்லிம்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. ஆகவே இரு சமயங்களும் நல்லுறவை பேணிவந்தனர்.

ஆரம்ப காலங்களில் இருந்து இரு சமயத்தவர்களும் கலாசார பண்பாட்டு அம்சங்களிலும் விட்டுக் கொடுப்புடனும் சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொண்டனர். முஸ்லிம்களின் கொடியேற்றம், கொடி இறக்கம், கந்தூரி, மழைப்பாட்டு, சந்தனக் கூடு சுத்தல் போன்ற செயற்பாடுகளை பௌத்தர்கள் பார்வையிட வந்தமையும், பெருநாட்களில் உணவு வகைகளைப் பறிமாறிக் கொண்டமையும் முஸ்லிம்களும் விழாக்களின் போது பௌத்த விகாரைகளுக்குச் சென்று சிங்களப் பாடல்களைப் பாடியுள்ளமையும் இவர்களின் சமய சகிப்புத்தன்மையுடனான புரிந்துணர்வை விளக்குகின்றது. மேலும் நோன்பு காலங்களில் முஸ்லிம்களுக்கு மதிப்பளித்தல், முஸ்லிம்கள் வீடுகளுக்கு வந்தால் பேணுதலுடன் நடத்தல், முஸ்லிம்களின் சுத்தம் பற்றி அறிந்து நடத்தல், முஸ்லிம் பெண்களுக்கு கண்ணியமளித்தல், போன்ற பண்புகளையும் பௌத்தர்கள் கொண்டிருந்ததோடு முஸ்லிம்களின் சமயம், கலாசாரம், பண்பாடுகள், சமய கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள் போன்றவற்றிக்கும் மதிப்பளித்தனர். முஸ்லிம்களும் இது போலவே பௌதர்களுக்கும் மதிப்பளித்தனர்.

இவ்வாறு பௌத்த முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் காணப்படும் புரிந்துணர்வானது ஆரம்ப காலங்களை விட குறைவடைந்து செல்வதனை நேர்காணல் மூலம் அவதானிக்க முடிகிறது. சமய ரீதியான கோட்பாடுகளும், வழிபாட்டு முறைகளும், கலாசாரங்களும், இன்று இரு சமயத்தினருக்கும் மத்தியில் தப்பபிப்ராயத்தை ஏற்படுத்தி பிளவுக்கு வழிவகுப்பதாக அமைகின்றன.

இன்று அனைத்து விடயங்களிலும் சமயத்தை முன்னுரிமைப்படுத்தியே மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக இரு சமயங்களுக்கும் இடையில் தப்பான எண்ணங்கள் உருவாகியிருப்பதும் சில குழுக்கள் சமய புரிந்துணர்வினை இல்லாமல் செய்வதும் இனத்துவச் செயற்பாடுகளை முன்னெடுப்பதும் இன்று சமய புரிந்துணர்வினை இல்லாமல் செய்கின்றது என குறிப்பிடுகின்றனர்.

பௌத்தர்களிடையே முஸ்லிம்களின் சமயக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறைகளும் இரு தப்பபிப்ராயத்திற்கு வழிவகுத்து விரிசலுக்கு வழிகோலியது என பௌத்த மக்களில் 88.46 வீதமானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். பௌத்தர்களின் சமய நம்பிக்கைகளை முஸ்லிம்கள் கேலி செய்தல், பௌத்த பிக்குகளின் ஆடையை கேலி செய்தல் (பென்டா போத்தல்), சிலைகளை தொடுதல், சமய நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமை, அதே போன்று

முஸ்லிம்களின் அன்றாட நடத்தைகளான சமய நம்பிக்கைகள், கோட்பாடுகள், அதான் சொல்லல், ஹலால் ஹராம் குறித்த விடயங்களில் பௌத்தர்களுக்குத் தெளிவின்மையும், முஸ்லிம் பெண்களின் பர்தா அணிவதும், பெண்கள் முகத்திரை அணிவதும், முஸ்லிம்களின் மார்க்கக் கடமையான குர்பான் கொடுத்தல், பலதார மணம் புரிதல், அதிகமான குழந்தைகளை முஸ்லிம்கள் பெறுவதும் இன்று பௌத்த முஸ்லிம் உறவில் பிறழ்வுக்கு வழிவகுத்த காரணிகளாக விளங்குகின்றன.

ஒரு முஸ்லிம் கிராமத்தினுள் பல பகுதிகளிலும் அதான் சத்தம் கேட்பது பௌத்தர்களை அச்சத்திற்குள்ளாக்கி இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இன்று ஒரு மஸ்ஜித் சமூகத்திற்கு தேவையாக இருக்கின்ற போது அதிகளவான மஸ்ஜித்கள் காணப்படுதல் அவை ஒவ்வொன்றினதும் அதான் ஒலி சப்தமாக ஒவ்வொரு நேரமும் பௌத்தர்களால் கேட்க நேரிடல் என்பனவற்றை பௌத்தர்கள் வெறுக்கின்றனர் முஸ்லிம்களின் அதான் சத்தம் அதிகமாக இருப்பதனால் பௌதர்கள் அதனை விரும்பவில்லை. அத்தோடு பயான் சத்தம் அதிகமாக போடுவது ஏன் பள்ளியினுள் இருப்பவர்கள் கேட்டால் போதும் ஏன் அதனை சத்தமாக போட்டு ஏனையவர்களின் சுதந்திரத்தை பறிக்கின்றனர் என பௌத்த மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

*''முஸ்லிம்களின் அதான் சத்தமும் பயான் சத்தமும் ஏனையவர்களின் சுதந்திரத்தை பறிக்கின்றது. பேருந்திற்கு காத்திருப்பது கூட வெறுக்கின்றது''* என குறிப்பிடுகின்றனர்.

ஹலால் ஹராம் தொடர்பாக பௌத்த மக்கள் குறிப்பிடும் போது,

*''அனைவரும் மனிதர்கள் தான். எங்களை போன்றே நீங்களும் உள்ளீர்கள். நீங்கள் தயாரித்த பொருட்களை நாம் உண்ணும் போது, நாம் தயாரிப்பதிற்கு ஏன் ஹலால் சான்றிதல் கேட்க வேண்டும்''*

இவ்வாறான குற்றச்சாட்டுகளையும் தப்பபிப்ராயங்களையும் பௌத்தர்கள் முஸ்லிம்களின் நடத்தைகள் மீது கருத்துகளை முன்வைக்கின்றனர்.

மேலும் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவது முரண்பாடுகளுக்கும் மன அழுத்தங்களுக்கும் வித்திட்டுள்ளது. முஸ்லிம்கள் அவர்களின் பெண்களின் ஆடையை அணிய வேண்டும் என திணிக்கின்றனர்.

*''அவ் ஆடை அவர்களுக்கு சுதந்திரத்தை தர மறுக்கின்றது, இலங்கை போன்ற வெப்பமான நாடுகளுக்கு இது பொருத்தமற்றது, அவ் ஆடையினால் குற்றச் செயல்கள் அதிகமாகின்றன. சிறு பிள்ளைகள் அவ் ஆடையை கண்டால் பயப்படுகின்றனர். பெண்களை பேய் வடிவில் சித்தரிப்பதும் அவ்வாறு ஆடை அணிபவர்களை பில்லோ என்றும் எம் சமூகத்தினர் கேலி செய்ய முற்படுவது அவ் ஆடையின் அமைப்பினாலேயாகும்''.*

*''சுகாதாரம் தொடர்பாக பேசும் முஸ்லிம்கள் அபாயா எனும் மேலாடையினுல் வீட்டில் இருந்து வேலை செய்த அதே ஆடையின் மேல் அணிந்து வருகின்றனர். இவர்களின் செயற்பாடுகள் பொது இடங்களுக்கு பொருத்தமற்றது''*

என பௌத்த மக்கள் குறிப்பிடுவதுடன் இதனால் அவர்கள் அணியும் கருப்பு நிற ஆடையை பார்க்கும் போதே கோபம் வருகின்றது. இதனாலேயே நாம் இவ் ஆடையை பில்லோ என அழைக்கின்றோம் என்றால் *கறுப்பான பூதங்கள்* என பொருள்படும். ஆனால் முஸ்லிம் பெண்கள் அனைவரும் கறுப்பான ஆடையமைப்பையே பின்பற்றுகின்றனர். இது அரேபியாவை நினைவு கூர்வதாகக் குறிப்பிடுகின்றனர். அதுமட்டுமல்ல, இவ் ஆடை இலங்கையின் ஆரம்ப காலங்களில் முஸ்லிம்களால் அணியப்படவில்லை. ஆனால் அன்றும் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் வரையரையை பேணி ஆடைகளை அணிந்தனர். அதே போல் ஏன் இன்று அணிய முடியாது? இவ் ஆடை சவுதி அரேபியாவை நினைவு கூறுகின்றுது. இது முஸ்லிம் பெண்களின் சுதந்திரத்தை பறிப்பதுடன் அடிப்படை வாதத்திற்கும் இட்டுச்செல்கிறது. இதனால் அவர்கள் இஸ்லாம் கட்டாயமாக கறுப்பு நிற பர்தாவையே விரும்புகிறது என்று கருத்திற்கொள்ள வழிவகுக்கிறது. அத்தோடு பௌத்தர்களில் சிலர் அரேபியாவில் இருந்து வந்த கலாசாரம் எனக் குறிப்பிடுகின்றனர்.


முஸ்லிம்களின் மார்க்க கடமையான குர்பான் கொடுத்தல் குறித்து பிளவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. முஸ்லிம்கள் இரக்க குணம் உடையவர்கள் குர்பானி எனும் பெயரில் அதிகமாக உயிரினங்களை வதை செய்கின்றனர். இவர்களின் மார்க்கம் உயிரினங்கள் தொடர்பாக எதனை போதிக்கின்றது? இறைச்சி கடைகளில் தொங்கவிடப்பட்டுள்ளதை பார்க்கும் போதே கோபமேறுடுகின்றது. அவற்றை அவர்கள் சுகாதாரமான முறையில் அறுப்பதும் இல்லை அவற்றின் கழிவுகளை அவ்வாறே விட்டுச் செல்கின்றனர் போன்ற முஸ்லிம்களின் நடத்தைகள் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான உறவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதே போன்று நாய்களை கண்டால் ஒதுங்கிவிடல் அவைகளுக்கு கல்லால் அடித்தல் வேறுயாரேனும் உணவு வைத்தால் கூட அவற்றை விரட்டிவிடல் வீசும் உணவை கூட அவைகளுக்கு வழங்க விரும்பாமை ஆகவே முஸ்லிம்கள் உயிர்களிடத்தில் அன்பு காட்டாதவர்கள் என்று எண்ணிட தோன்றுகின்றது.

பலதாரமணத்தை சில முஸ்லிம்கள் மேற்கொள்கின்றனர். இஸ்லாம் அதற்கு அனுமதியும் வழங்கி இருக்கின்றது. அதனை பௌத்தர்கள் ஆண்களுக்கான சந்தர்ப்பமாக குறிப்பிடுகின்றனர். முஸ்லிம் ஆண்கள் காமவெறி பிடித்தவர்கள். அவர்கள் பெண்களை அடக்கி ஆழ்கின்றனர். இதனால் தான் அவர்களது நபி அதிக பெண்களை முடித்தார். மேலும் அதிகமான குழந்தைகளை பெறுவது தமது இனத்தினை பரவலாக்கம் செய்யவே என குறிப்பிடுவதுடன் ஆண்களுக்கு செய்யும் கத்னா அவர்களின் உணர்வை பாதிப்பதுடன் சிறு வயதிலே அவர்களின் விருப்பமின்றி அவர்களை வதைக்கும் செயலாகவே பௌத்தர்கள் நோக்குகின்றனர்.

அதே போல முஸ்லிம் ஆண்கள் தாடி வைப்பது தொடர்பாகவும், பௌத்தர்களிடம் தப்பபிப்ராயங்கள் மேலோங்கியுள்ளன. தாடி வைப்பவர்கள் தீவிரவாதிகள், அவர்கள் தாடியினை முறையாக பராமறிப்பதில்லை. சுத்தத்தினை பேணாதவர்கள் என்றும் தாடியினை வைப்பதனால் ஆள் அடையாளம் கண்டுகொள்வது கடினம் என்றும் தாடிவைப்பவர்கள் ஏமாற்றுபவர்கள் என்றும் பௌத்தர்கள் குறிப்பிடுகின்றனர். மேற்கூறப்பட்ட அனைத்து அம்சங்களும் சமய கலாசார ரீதியாக பௌத்த முஸ்லிம் புரிந்துணர்வில் ஏற்பட்டுள்ள

மாற்றங்களை துள்ளியமாக விளக்குகின்றது. இதனை பின்வரும் வரைபடம் தெளிவுபடுத்துகின்றது.

வரைபடம் - 01




(மூலம்: நேர்காணல் பகுப்பாய்வு 2018)

முஸ்லிம்களின் நடவடிக்கைகள் தொடர்பான பௌத்த மக்களின் கலாசார ரீதியான புரிந்துணர்வினை நோக்கும் போது பெண்களின் ஆடை தொடர்பான தப்பபிப்ராயமே அதிகளவில் பௌத்த மக்களிடம் அவதானிக்க முடிகிறது. அதே போன்று உழ்ஹியா வழங்கும் செயற்பாட்டினையும் பௌத்த மக்கள் வெறுக்கின்றனர் குறைந்தளவிலான எண்ணிக்கையுடைய பௌத்த மக்கள் ஆண்களின் தாடி வைப்பதில் அதிருப்தியை வெளியிட்டுள்ளதனை இவ் வரைபின் மூலம் அவதானிக்க முடிகிறது.

அதே போன்று முஸ்லிம்களால் மேற்கொள்ளப்படும் கத்னா செய்யும் செயற்பாட்டினையும் ஆண்களின் உரிமை மீறல் என குறிப்பிட்டதுடன். வெள்ளிக் கிழமை நாட்களில் நடைபெறும் குத்பாவையும் அவை அதிக சப்தத்துடன் நடைபெறுவதனால் எமது செயற்பாடுகளுக்கு தடையாக உள்ளது என தமது குற்றச்சாட்டுகளை பௌத்த மக்கள் முன்வைக்கின்றனர். அதே போன்று முஸ்லிம்கள் அதிக குழந்தைகளை பெறுவது தமது பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளவே என பௌத்த மக்களில் 50 வீதமானோர் குறிப்பிடுகின்றனர்.

இவ் வரைபடத்தினை அவதானிக்கும் போது முஸ்லிம்களின் அதிகளவான கலாசார ரீதியான செயற்பாடுகள் பௌத்த மக்களின் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதனை அவதானிக்க முடிகிறது.

**5.4 திருமண வாழ்வு தொடர்பான பௌத்த முஸ்லிம் புரிந்துணர்வு**

பல இன மக்கள் இணைந்து வாழும் போது அங்கு கலப்பு திருமணம் இடம்பெறுவது பொதுவான அம்சமாக மாறிவிட்டது. இதனை பௌத்த மக்கள் ஏற்கின்றனர். ஒரே இடத்தில் வியாபாரங்களை மேற்கொண்டமை, கூலி வேலைகளில் இணைந்து செயற்படல் வீடுகளுக்குச் சமூகமளித்தல், திருமண நிகழ்வில் கலந்துகொள்ளல் போன்ற செயற்பாடுகள் அனைத்தையும் பௌத்த முஸ்லிம் என்ற பாகுபாடின்றி மேற்கொண்டனர். இது பௌத்த முஸ்லிம் புரிந்துணர்வு

ரீதியான செயற்பாடு போற்றத்தக்கதாக காணப்பட்டது என நேர்காணல் தகவல்கள் மூலம் அறியக்கிடைத்தன.

ஆனால் இன்றும் திருமண உறவு ஆரம்ப காலங்களை போன்று பேணப்படுகின்றதா? என நேர்காணலில் கேற்கும் போது திருமண உறவில் இன ரீதியில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்றே குறிப்பிடுகின்றனர். பல இன மக்கள் ஒன்றாக கலந்து வாழும் போது காதல் விவகாரம், கலப்புத்திருமணம் இடம்பெறுவது பொதுவானது என பௌத்த மக்கள் குறிப்பிடுகின்றனர். இருந்தபோதும் முஸ்லிம்கள் அவர்களது மணமகளை பார்க்க அனுமதிப்பதில்லை, எங்களது திருமணத்திற்கு வந்தால் மிக குறைவாகவே உணவருந்துவதுடன் பௌத்தர்களுடன் இணைந்து செல்ல விரும்புவதில்லை. மதுபானம் போன்ற குளிர்பானங்கள் பகிரப்பட்டால் அதனை விரும்பாது ஒதுங்கியிருத்தல், ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் நாம் ஒரு குளிர்பானத்தையே தருகிறோம் என்கின்றனர். அத்தோடு முஸ்லிம் பெண்களை கைலாகு செய்ய அனுமதியில்லை. கைலாகு செய்வதனால் ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறுமா என முஸ்லிம்களின் திருமணம் தொடர்பான பல விடயங்களை பௌத்தர்கள் முன்வைக்கின்றனர். ஒன்றாக வேலை செய்தல், ஒன்றாக பயணித்தல், அருகருகே குடியிருப்புகளை அமைக்க முஸ்லிம்கள் விரும்புவதில்லை. ஏன் நாமும் அவர்களை போன்ற மனிதப் பிறப்பே என குறிப்பிடுகின்றனர்.

**முடிவுரைகளும் விதந்துரைகளும்**

**முடிவுரை**

இந்த ஆய்வானது இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அமையப்பெற்ற மாவட்டமான அனுராதபுரத்தில் உள்ள கனேவல்பொள எனும் கிராமத்தில் முஸ்லிம்களின் நடத்தைகள் தொடர்பான பௌத்த மக்களின் புரிதல்களை கண்டரியக்கூடியதாக அமையப்பெற்றுள்ளன. இது பிரதானமாக, முஸ்லிம்களின் நடத்தைகள் தொடர்பான பௌத்த மக்களின் நிலைப்பாடு என்ன அவற்றை அரசியல், பொருளாதாரம், கலாசாரம், திருமண வாழ்வு ஆகிய துறை ரீதியாக முஸ்லிம்களின் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டு அதன் மூலம் பௌத்த மக்களின் புரிதலின் தன்மையினை கண்டரிவதுடன், இவ்வாய்வின் நோக்கத்தை அடையும் நோக்கில், பண்பு ரீதியான தரவுகளான அரைக்கட்டமைக்கப்பட்ட நேர்காணல் முறையை கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவாக நோக்கும் போது, இவ்வாய்வில் பௌத்த மக்கள் முஸ்லிம்களின் கலாசார ரீதியான நடத்தைகளையே அதிகம் விமர்சிக்கின்றனர். இதற்கு முஸ்லிம்களின் நடவடிக்கைகள் காரணமாக அமைவதுடன் சில விடயங்களில் பௌத்தர்களின் தப்பான புரிதலும் பிரிவினைக்கு வழிவகுத்துள்ளது.

அரசியல் நடவடிக்கைகளிலும் இரு சாராரும் தமது வாக்குகளை இன ரீதியாக கூறு போடாமல் இணைந்து செயற்பட்டதுடன் தேசிய கட்சிகளிலும் தமது பிரதேசத்தின் நன்மைக்காக ஒற்றுமையுடன் செயற்பட்டனர். அதே போன்று பொருளாதார விடயத்தினை பார்த்தால், இரு சாராரும் விவசாய நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்ட அதே வேளை பண்டமாற்று முறை, உணவுப் பரிமாற்றம் என்பனவும் இடம்பெற்றன. கலாசார ரீதியான

புரிந்துணர்வினை பார்க்கும் போதும் எங்கும் நல்லிணக்கத்துடனே செயற்பட்டுள்ளனர். சமய ரீதியான சகிப்புத்தன்மையினை இரு சாராரும் கடைபிடித்தனர். இவ்வாறு பௌத்த முஸ்லிம்களிடம் புரிந்துணர்வு காணப்பட்ட போதும் அண்மைக்காலத்தில் இரு இனங்களுக்கு மத்தியிலும் புரிதலில் ஓர் முரண்பட்ட தன்மையை அவதானிக்கமுடிகிறது. இம் முடிவானது நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் இன்று முஸ்லிம்களின் அரசியல் ரீதியான முன்னேற்றம், இன ரீதியான விழிப்புணர்வு, அரசியல் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, அத்தோடு சமகால சூழலில் சிறுபான்மையினருக்கான அழுத்தங்கள் அதிகரித்துள்ளமையினால் முஸ்லிம்களின் அரசியல் ரீதியான மாற்றங்களுக்கு வழியமைத்தது. ஆனால் இதனை பௌத்த மக்கள் இன ரீதியிலான பிரிவினை வாதத்தினை தோற்றுவிக்கின்றனர் என்றும் அரசியல் இலாபங்களை பெற முயற்சிப்பதுடன் இலங்கையின் ஆட்சியில் பல பகுதிகளையும் தம் நிர்வாகம் கீழ் வைத்துக்கொள்ள விரும்புகின்றனர் என முஸ்லிம்களின் நடவடிக்கைகளை விமர்சன கண்ணோக்கில் தமது கருத்துகளை முன்வைக்கின்றனர்.

பொருளாதார ரீதியான மாற்றங்களுக்கு முஸ்லிம்களின் நம்பிக்கை குறைவடைந்து சென்றமையே பௌத்தர்கள் முஸ்லிம்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்க காரணமாக அமைந்தது. ஏனெனில் முஸ்லிம் கடைகளில் பொருட்களுக்கான விலை அதிகம், பொருட்களின் தரம் குறைவு, மரக்கறிகளில் அதிகமானவை பழுதடைந்தாக காணப்படல் போன்ற காரணிகளால் முஸ்லிம் பொருளாதாரம் பற்றி பௌத்த மக்கள் விமர்சிக்கின்றனர். அதனால் சில முஸ்லிம் கடைகளில் பௌத்த மக்கள் பொருட்கள் வாங்குவதையே தடைசெய்துள்ளனர். இவ்வாறு முஸ்லிம்களின் தவறான செயற்பாடே பௌத்த மக்கள் முஸ்லிம் பொருளாதாரம் தொடர்பாக விமர்சிக்க காரணமாக அமைந்தது.

சமய ரீதியான பௌத்த மக்களின் செயற்பாடுகளை நோக்கும் போது இரு சமயத்தவர்களிடமும் காலங்காலமாக இருந்து வந்த நம்பிக்கை, இன ரீதியான குழுக்கள் இல்லாதிருந்தமை, சமய சகிப்புத்தன்மை பேணப்பட்டமை போன்ற அம்சங்களும் அதே போன்று இணைந்து கல்வி கற்றமை, பொது வேலைகளில் ஒன்றாக செயற்பட்டமை போன்ற காரணிகள் சமய ரீதியான நல்லுறவை பேணுவதற்கு காரணமாக அமைந்தது.

திருமணம் தொடர்பான புரிந்துணர்வுக்கு திருமண வேலைகளில் ஒன்றாக செயற்பட்டனர். அதே போன்று உணவு உண்ணல் போன்ற செயற்பாடுகளில் இன வேறுபாடு பார்க்காது ஒன்றாக செயற்பட்டனர். ஆகவே, ஆரம்ப காலங்களில் பௌத்த முஸ்லிம்களின் செயற்பாடுகள் அனைத்தும் இன நல்லுறவை பாதிக்காத வகையில் இரு சாராரும் ஒற்றுமையாக செயற்பட்டனர். இவ்வாறு இரு சாராரினதும் உறவு சிறப்பாக பேணப்பட்டு வந்த போதும் இன்றைய சூழ்நிலையில் பௌத்த முஸ்லிம் உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதனை அவதானிக்கலாம்.

அரசியல் அபிலாசைகள், இனத்துவ கட்சிகளின் தோற்றம், அரசியல் இலாபங்கள், அரசியல் வேட்பாளர்களின் அதிகரிப்பு, அரசியல் இலாபங்கள் குறைவாகக் கிடைக்கப்பெறல்,

சிறுபான்மை அழுத்தங்களுக்கு உள்ளாதல் போன்றன அரசியல் ரீதியான மாற்றத்திற்கு வழிவகுத்தன.

பொருளாதார ரீதியான மாற்றங்களுக்கு பொருளாதார ரீதியான போட்டி, முஸ்லிம்களின் கடைகளில் பொருட்களின் விலை அதிகம், பொருட்களின் தரம் குறைவு, வட்டி, முஸ்லிம்கள் பௌத்தர்களின் கடைகளுக்கு செல்ல விரும்பாமை போன்ற காரணிகளால் பௌத்த முஸ்லிம் பொருளாதார ரீதியான புரிந்துணர்வின்மை தோன்ற காரணமாக அமைந்தது.

சமய ரீதியான மாற்றங்களுக்கு அதிகளவான காரணிகள் அடிப்படையாக அமைந்துள்ளது என்பது ஆய்வுகளின் முடிவாகும். அதில் பிரதானமானது முஸ்லிம் பெண்களின் ஆடை அமைப்பு முறையாகும். ஆடை அமைப்பானது பௌத்த முஸ்லிம் உறவில் அதிகளவான தாக்கம் செலுத்த காரணமாக அமைந்தது. அதுமட்டுமல்லாமல் அதான் சொல்லுதல், தாடி வைத்தல், ஹராம் ஹலால் பேணல், உழ்கிய்யா, பிக்குமார்கள் கேலி செய்யப்படல், முஸ்லிம்கள் அதிகம் குழந்தைகள் பெறல் போன்றன புரிந்துணர்வில் விரிசல் ஏற்பட காரணமாக அமைந்தது

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பௌத்த முஸ்லிம்களிடம் புரிந்துணர்வு ரீதியான சகவாழ்வு காணப்பட்டது. ஆனால் அண்மையில் முரண்பாடுகள் தோன்றவும் புரிந்துணர்வில் மாற்றங்கள் ஏற்படுத்திய காரணிகளை பார்க்கும் போது அவை இஸ்லாத்திற்கு மாற்றமானவை என முடிவுகள் மூலம் அவதானிக்கலாம்.

**விதந்துரைகள்**

இங்கு புரிந்துணர்வு பேணப்படாமைக்கும் முரண்பாடுகளுக்கும் சமய ரீதியான சிக்கல்கள் காணப்படுவதே புரிந்துணர்வில் மாற்றத்தை ஏற்படுத்தின. இதனாலேயே பௌத்த முஸ்லிம் புரிந்துணர்வில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்கால சூழ்நிலையை பொறுத்தவரை புரிந்துணர்வில்லாத, ஒரு சமூகமாகவே பௌத்த முஸ்லிம் இன வாதப் குழுக்களினால் தூண்டப்பட்டு பௌத்த முஸ்லிம் முரண்பாட்டுக்கு காரணமாக அமைந்தது. மார்க்கம் பற்றிய தெளிவின்மையும் மார்க்க அடிப்படையிலான விழிப்புணர்வின்மையும் பௌத்த முஸ்லிம் புரிந்துணர்வின்மைக்கும் சிக்கல்களுக்கும், முரண்பாடுகளுக்கும் காரணமாக அமைந்தன.

அதுமட்டுமல்லாமல் இரு சமயங்களும் சில விடயங்களில் விட்டுக் கொடுப்பின்மையும் சில விடயங்களில் மார்க்கத்திற்கு முரணாக செயற்படுகின்றமை அதே போன்று இஸ்லாமிய வரையரைகளை மீறாது பிற மதத்தவர்களுடன் புரிந்துணர்வுடன் வாழ்வதையே இஸ்லாம் விரும்புகின்றது. முஸ்லிம்கள் சில நடவடிக்கைகளில் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும் (அதான், குர்பான், ஆடை அமைப்பு, வைத்தியசாலைகளில் நடந்து கொள்ளும் முறை) இவற்றில் முஸ்லிம்கள் சற்று புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அதே போன்று பௌத்தர்கள் தமது விடயங்களிலும் சகிப்புத்தன்மையுடன் செயற்பட வேண்டும். (சமய செயற்பாடுகள்)

கனேவல்பொள பிரதேசம் பல்லின மக்களை உள்ளடக்கி இருப்பதனால் புரிந்துணர்வு இன்றியமையாத அம்சமாகும். ஆரம்ப காலங்களில் இருசாராரும் ஒற்றுமையுடன் செயற்பட்ட

அதே வேளை புரிந்துணர்வுடனும் முரண்பாடுகள் அற்ற நிலையில் வாழ்ந்தனர். ஆரம்ப காலத்தில் இன ரீதியான பிளவுகள் அவர்களிடம் காணப்பட வில்லை. ஆனால் இன்றைய சூழலில் பிளவுகள் அதிகம் ஏற்பட்டு வருகின்றன. இவ்வாறான புரிதலின் முரண்பாட்டிற்கு இரு சாராரினதும் செயற்பாடுகள் காரணமாக அமைகின்றன. அத்துடன் பிற இனத்தவருடன் எவ்வாறான நடவடிக்கைகளையும் உறவுகளையும் பேண வேண்டும் என இஸ்லாத்தின் அழகிய முன்மாதிரிகள் காணப்படுகின்றன. ஆனால் அவை அனைத்தும் முஸ்லிம்களாலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பேணப்படாமையும் புரிந்துணர்வின் சிக்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஆகவே புரிந்துணர்வு ரீதியாக சரியான புரிதல் இரு சாராரிடமும் காணப்படவேண்டுமாயின் பௌத்தர்கள் சகிப்பும் தன்மையுடனும் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் வரையரைகளை சரியாக பேணும் போது இரு சாராரின் மத்தியிலும் சகவாழ்வை கட்டியெழுப்புவதில் ஐயமில்லை.

இன்றைய சூழலில் இன வாதிகளின் தூண்டுதலினால் அதிகளவான வன்முறைகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அதில் இருந்து பௌத்த முஸ்லிம் இன நல்லுறவை ஏற்படுத்த வேண்டுமெனின் இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்வது காலத்தின் தேவையாகும்.

இவ்வாறான பௌத்த மக்களின் புரிதல்களில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின் இரு மதங்களுக்குமிடையில் சமய சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பதுடன் முஸ்லிம்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் இஸ்லாமிய போதனைகளை பின்பற்ற முன்வரும் போது பௌத்த முஸ்லிம் உறவில் நல்லிணக்கத்திற்கும் இரு சமயங்களுக்குமிடையிலான புரிதலினை சிறப்பாக அமைத்துக் கொள்ளவும் முடியுமாக இருக்கும். இது எதிர்காலத்தில் பௌத்த முஸ்லிம் உறவினை கட்டியெழுப்பவும் முரண்பாடுகளை தடுக்கவும் அதே போல சமூக நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கும் இவ்வாய்வு பயனுடையதாக அமையும்.

**உசாத்துணைகள்**


1. Ahamed Sarjoon Razick,(September 2017)"Socio-Cultural issues and the relationships between Buddhists and Muslim in Sri Lanka" [Online] available: https://www. research gate.net/ Publication/ Socio-Cultural- issues- and- the –relationships- between Buddhists- and –Muslim- in- Sri- Lanka [accessed] 2018.08.27
2. Ahamed Sarjoon Razick,(October 2018),"Sri Lanka Journal of Arabic and Islamic Studies Buddhists View on Muslim Socio-culture in Post-war Context of Sri Lanka" [Online] available: https://www. research gate.net/ Publication/331021241- Sri Lanka -Journal -of –Arabic- and- Islamic- Studies -Buddhists –View- on –Muslim- Socio-culture -in -Post-war- Context- of- Sri Lanka, [accessed] 2018.08.11
3. Ahamed Sarjoon Razick,(February 2017)"Muslim Socio-culture and Majority-Minority Relations in recent Sri Lanka" [Online] available https://www. research gate.net/ Publication/ 314128241-Muslim -Socio-culture- and -Majority-Minority-Relations- in- recent- Sri Lank [accessed] 2018.08.20
4. Ahamed Sarjoon Razick ,(October 2016)"Buddhists Vies on Muslim Socio-Culture in Post-War Context of Sri Lanka" [Online] available : https://www. research gate.net/ Publication/ 3099732283-Buddhists- View- on- Muslim- Socio-Culture- in -Post-War –Context-t of –Sri- Lanka [accessed] 2018.08.10
5. Ahamed Sarjoon Razick ,(October 2016)."Impacts of Recent Tension on the Relationship: Buddhist and Muslim Point of View",[Online] available : https://www. research gate.net/ Publication/31036476- Impacts- of- Recent- Tension- on- the –Relationship-: Buddhist- and- Muslim- Point- of- View, [accessed] 2018.08.10
6. Ahamed Sarjoon Razick ,(July 2016),"An Analysis of the Post-war Community Relations between Buddhists and Muslims in Sri Lanka : A Muslim's Perspective" ",[Online] available: https://www. research gate.net/ Publication/305754651- An-Analysis -of –the- Post-war -Community –Relations- between- Buddhists- and -Muslims -in –Sri- Lanka: A- Muslim's -Perspective[accessed] 2018.08.24
7. Ahamed Sarjoon Razick,(May 2016),"Workplace Interaction among the Sinhalese(Buddhists)and the Muslims in Sri Lanka", ",[Online] available https://www. research gate.net/ Publication/300130701- Workplace- Interaction- among- the –Sinhalese-(Buddhists) –and- the Muslims- in -Sri Lanka [accessed] 2018.08.15
8. Ahamed Sarjoon Razick ,(April 2016),"Social Interaction among Buddhists (Sinhalese)and Muslims in Moneragala District,Sri Lanka" ",[Online] available

https://www. research gate.net/ Publication 3011284160-Social- Interaction- among- Buddhists- (Sinhalese)- and –Muslims- in- Moneragala- District, -Sri Lank [accessed] 2018.08.24

9. Ameer Ali, (December 2004).” The Muslim of Sri Lanka: an ethnic minority trapped in a Political quagmire”, [Online] available: https://www.google.com//amp/s /www.research gate.net/ publication/233613613-The Muslim- of- Sri Lanka: an- ethnic- minority- trapped- in -a- Political –quagmire/amp [accessed] 2018.08.16
10. Athambawa Sarjoon, (April.29.2014)” Positioning Muslims in Ethnic Relations, Ethnic Conflict and Peace Process in Sri Lanka” [Online] available :URL: http://.dx.doi.org /10.5539/ass. v10n10p199 [accessed] 2018.10.02
11. Ahamed Sarjoon Razick,(May 2015)”Relationship between the Sinhalese and the Muslims in Sri Lanka: A Bibliographical Survey”, ”,[Online] available: https://www. research gate.net/ Publication/277014857 –Relationship- between- the- Sinhalese- and- the- Muslims –in- Sri- Lanka: -A- Bibliographical -Survey[accessed] 2018.10.11
12. hamed Sarjoon Razick,(January 2015),”Post-War Tension between the Buddhists and the Muslims in Sri Lanka” ), ”,[Online] available: https://www. research gate.net/ Publication/ 277631693- Post-War- Tension-between- the-Buddhists- and- the – Muslims- in- Sri -Lanka” [accessed] 2018.10.01
13. Gerald Perris, (August 2017). “A Study of Contemporary Buddhist-Muslim Relations in Sri Lanka” [Online] available :https://www. research gate.net/ Publication/319999061- A- Study- of- Contemporary- Buddhist-Muslim- Relations- in -Sri Lanka [accessed] 2018.09.01
14. Seyed Mohamed Mohamed Mazahir, Ahamed Sarjoon Razick, (September 2018)” Hate Campaigns and The Attacks Against the Muslim in Sri Lanka” [Online] available: https://www.google.com//amp/s /www.research gate.net [accessed] 2018.09.01
15. அஹ்மட் சர்ஜூன் ராசிக், மொஹமட் மஸாஹிர், கபூர்தீன் (2013) ”இலங்கை முஸ்லிம்களுக்கெதிரான அண்மைக்கால தாக்குதல்கள் [Online] available :https://www. www.ground views.org [accessed] 2018.08.27
16. அஹ்மட் சர்ஜூன் ராசிக், அஹ்மது இஸ்மாயில் கமருத்தீன் ”இலங்கை பௌத்த முஸ்லிம் பிந்தய கால உறவு [Online] available : https://www.liste.org/ journals [accessed] 2018.08.27